சிவகங்கையில் – விலைவாசியை குறைக்க வலியுறுத்தி பெண் கதறி தர்ணா:

அல்லற்பட்டு ஆற்றாது அழும் கண்ணீரை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை,அக்.25-

விலைவாசியை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நியூஸ் தமிழ் 24x7 சேனலில் வெளியான வீடியோ ஒன்றைக் குறிப்பிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

தினம் தினம் அதிகரித்து வரும் விலைவாசியால் அவதிப்பட்டு வாழ்வாதாரமே பாதிப்பிற்குள்ளாகிறதே என்று சிவகங்கையில் கண்ணீர் மல்க அழுகிறார் ஒரு பெண்மணி.

விலைவாசியைக் குறைங்க; விலைவாசியைக் குறைங்க என்று கதறி சாலையில் படுத்து தர்ணாவில் ஈடுபட்ட பெண்ணால் பரபரப்பு என்று நியூஸ் தமிழ் 24x7 செய்திச் சேனல் வீடியோ ஒன்றை வெளியிட்டது.

அதை மேற்கோள் காட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழும் கண்ணீர் இது என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும் என்று சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.





என்ன நடக்கிறது தமிழ்நாட்டில்?

Sleep Mode-லிருந்து வெளியே வருவாரா முதலமைச்சர்?

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!



சென்னை, அக்.25-

என்ன நடக்கிறது தமிழ்நாட்டில்?

Sleep Mode-லிருந்து வெளியே வருவாரா முதலமைச்சர்? என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே நள்ளிரவில் வீட்டிற்குள் தூங்கிக் கொண்டு இருந்த குடும்பத்தினர் மீது மர்ம கும்பல் ஒன்று ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதில், மேரி ரெஜிலா என்ற பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொடூர தாக்குதலில் அந்தப்பெண்ணின் கணவரும், மகனும் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்த பெண்ணின் 2 மகள்களையும் அந்தக்கும்பல் கடத்தியுள்ளது. சில மணி நேரத்துக்குப் பின்னர் அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இதுமட்டுமின்றி, வேளாங்கண்ணியில் வீட்டை விட்டு வெளியேறி வந்த 2 சிறுமிகளை விடுதியில் அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமை செய்த சம்பவமும், திருநெல்வேலியில் இருந்து வீட்டை விட்டு வெளியேறிய இன்னொரு சிறுமி கூட்டு பலாத்காரம் செய்யப்பட்ட கொடுமையும் நடந்திருக்கிறது.

மேலும், த.வெ.க.வின் கன்னியாகுமரி மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கிறிஸ்டோபர் என்பவர், கல்லூரி மாணவி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இந்த SofaModel ஆட்சி அமைந்தது முதல், ஆளுங்கட்சியில் பாலியல் குற்ற வாளிகள் பிரிவு என்று ஒன்று ஆரம்பிக்கிற அளவுக்கு, பாலியல் குற்றவாளிகள் நிரம்பி வழிகிறார்கள்.

ஆனால், இவர்கள் யார் மீதும் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கைப் பார்ப்பது தான் முதலமைச்சரின் பெண்கள் பாதுகாப்பு லட்சணமா?

ஆட்சிக்கு வந்து 5 மாதங்கள் ஆகியும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டாமல் Reels Shoot செய்யும் Dummy CM, எப்போது தான் குற்றங்களைக் கட்டுப்படுத்துவார்?

இந்தக்குற்றச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் வகையில் ஆட்சியாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே சென்றால் அதற்குக் காரணம் திறமையின்மையா, அக்கறையின்மையா?

தமிழ்நாட்டில் வீட்டிற்குள்ளேயே பெண்கள், குழந்தைகளுக்குப் பாதுகாப்பில்லாத சூழல் நிலவுகிறது!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விளாசல்!

தூத்துக்குடி, அக்.25-

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே உள்ள முதலூரில் நேற்று அதிகாலை வீடு புகுந்து மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் மேரி ரெஜிலா (39) உயிரிழந்தார். அவரது கணவர் முத்துக்கிருஷ்ணன் (50), மகன் பிளஸ்ட் ராஜா (10) ஆகியோர் படுகாயமடைந்தனர். மேலும், இரு பெண் குழந்தைகள் மாயமான நிலையில், குற்றவாளி ஞானசேகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதலில் படுகாயமடைந்த முத்துக் கிருஷ்ணன் மற்றும் பிளஸ்ட் ராஜா ஆகியோர் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மருத்துவமனையில் நலம் விசாரித்தார்!

இந்நிலையில், திமுக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று, சிகிச்சை பெற்று வரும் முத்துக்கிருஷ்ணன் மற்றும் அவரது மகன் பிளஸ்ட் ராஜா நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த பேசிய அவர், சாத்தான்குளம் அருகே ஆனந்த புரத்தில் வசிக்கும் முத்துகிருஷ்ணன் அவர்களின் வீட்டிற்குள் புகுந்து, அவரையும் அவரது 10 வயது மகனையும் மிகக் கொடூரமாகத் தாக்கி, அவரது துணைவியாரைக் கொலை செய்தது டன், இரண்டு பெண்களையும் கடத்திச் சென்றுள்ள அதிர்ச்சியளிக்கும் சம்பவம் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்துகிறது.

தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று முத்துகிருஷ்ணன் அவர்களையும் அவரது மகனையும் சந்தித்தேன். அந்தச் சிறுவனின் விரல்கள் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், அவர் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார். அவரது தந்தைக்கும் உடலின் பல்வேறு இடங்களில் ஆழமான வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

வரது தாய் உயிரிழந்துள்ள நிலையில், தமிழ் நாட்டில் இத்தகைய குற்றச் சம்பவங்கள் தினந்தோறும் நடைபெற்று வருகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரே நாளில் நான்கு கொலைச் சம்பவங்கள் நடைபெறும் சூழல் நிலவுகிறது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் கொடூரமான கொலைகளும், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளும் நாள்தோறும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



சாத்தான்குளத்தில் படுகொலை செய்யப்பட்ட மேரி ரெஜிலா அவர்களின் கணவர் முத்துக்கிருஷ்ணன், அவரது மகன் ஆகியோர் படுகாயமடைந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார். அவர்களுக்கு உரிய நீதியைப் பெற்றுத் தருவோம் என உறுதியளித்து உரிய மருத்துவ சிகிச்சையும் பாதுகாப்பையும் அளிக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

தந்தையையும் மகனையும் சந்தித்தபோது, அச்சிறுவனின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்ற மிகப்பெரிய கேள்வி எழுகிறது. பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட இரண்டு பெண்களும் பின்னர் மீட்கப்பட்டு, குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார். காலையிலிருந்து குற்றவாளி கைது செய்யப்பட்டாரா, இல்லையா என்பதே கேள்விக்குறியாக இருந்தது.

மக்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ்கின்றனர்!

இத்தகைய சூழலில் மக்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். ஒரு வீட்டிற்குள் யார் வேண்டுமானாலும் புகுந்து, அங்கிருக்கும் தாயைக் கொலை செய்து, தந்தையைத் தாக்கி, பள்ளியில் படிக்கும் 10 வயதுச் சிறுவனையும் தாக்கி, இரண்டு பெண்களைக் கடத்திச் செல்ல முடியும் என்ற நிலை இருந்தால், வீட்டில் இருந்தாலும் வெளியே சென்றாலும் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதுதான் இன்றைய தமிழ்நாட்டின் நிலை.

இத்தகைய சூழலில்தான் இன்று தமிழ்நாடு தள்ளப்பட்டுள்ளது. காவல்துறை முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது. முதலமைச்சர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை.சட்டம் ஒழுங்கு சரியாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றுகிறதா? மனசாட்சியுள்ள யாருக்கும் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு எப்படியிருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். ஒவ்வொரு நாளும் கொலைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஒரே நாளில் பல வேறு இடங்களில் 8 முதல் 10 குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. இன்றைக்குத் தூத்துக்குடி மாவட்டத்திலேயே நான்கு குற்றச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

காவல்துறை முதல்வர் கட்டுப்பாட்டில் உள்ள இருக்கக்கூடிய துறை நான் குற்றச்சாட்டா கச் சொல்லவில்லை. அதுதான் உண்மை.

உண்மையில் காவல்துறை வேறு யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. குற்றச் சம்பவங்கள் குறைந்திருக்க வேண்டும் அல்லவா. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், ஒவ்வொரு நாளும் குற்றச் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே சென்றால் அதற்கு யார் பொறுப்பு. இதற்குக் காரணம் திறமையின்மையாக இருக்கலாம்; மற்றொரு காரணம் அக்கறையின்மை என்றார்.


இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களிடம் பேட்டியளித்தார்.

சிந்திக்கத் தூண்டிய திராவிட எழுத்துகள்!

அம்மையாரைப் பற்றி...!



நாகம்மையார்



மூவலூர் இராமாமிர்தம்

நம்முடைய இயக்கத் தின் பழைய கால நிகழ்ச்சிகளைப் பற்றி ஏதாவது எழுதுங்கள் என்று “முரசொலி” ஆசிரியர் கேட்டார். எல்லா நிகழ்ச்சி களையும் எடுத்துச் சொல்லுவதானால் இந்த ஏடு போதாது. எழுபதைக் கடந்து எண்பதை நெருங்கிக் கொண்டிருக்கும் என்னால் இந்தத் தள்ளாத வயதில் அவைகளையெல்லாம் முறையாக நினைவுக்குக் கொண்டுவந்து எழுதவும் இயலாது. எனவே நானும் பெண்ணினத்தைச் சேர்ந்தவளாக இருப்பதால் என்னைப் போலவே இந்த இயக்கத்துக்காகப் பாடுபட்டு - ஆனால் இப்போது நம்முடன் இல்லாத - நமது அன்னையாரான நாகம்மையார் அவர்களைப் பற்றி சில சொல்லலாமென எண்ணுகிறேன்.

1921-ம் ஆண்டில், திருச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் மாகாணக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அப்போது நான் மாகாணக் கமிட்டி உறுப்பினர். அந்தக் கூட்டத்தில் திரு. வி. க., டாக்டர் வரதராஜுலு நாயுடு, தண்டபாணிப் பிள்ளை, ஆச்சாரியார் ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியாரும் அவரோடு அன்னை நாகம்மையாரும் வந்திருந்தனர். அங்குதான் அம்மையார் அவர்களை முதன்முறை யாகப் பார்த்தேன். அது முதல் அவர்கள் மறையும் வரை - பெரியாரை விட்டுப் பிரிந்ததையே நான் கண்டதில்லை.

கள்ளுக்கடை மறியல் செய்வதென்று காங்கிரசில் தீர்மானம் அமுலுக்கு வந்தபோது அம்மையார் தலைமையாக நின்று மறியலைத் தீவிரமாக நடத்தினார்கள். மறியல் வெற்றிகரமாக நடந்து வந்ததைக் கண்டு, அப்போது வைஸ்ராயாக இருந்த லார்டு இர்வின் பிரபு காந்தியாரை அழைத்து, எப்படியாவது அந்த மறியலைக் கைவிட வேண்டுமென்று கேட்டபோது, காந்தியார், “மறியலை நிறுத்தும் அதிகாரம் என்னிடம் இல்லை; அதற்கு ஈரோட்டிலுள்ள ஈ. வெ. ரா. நாகம்மையார் அவர்களைத்தான் கேட்கவேண்டும்” எனக் கூறினார். அந்த மறியலில் பெரியார், ஆச்சாரியார் எல்லோரும் கலந்து கொண்டனர். என்றாலும் அம்மையாருக்குத்தான் பெருமையளித்தார் காந்தியார்.

பிறகு வைக்கத்தில் தீண்டாமை ஒழிப்புக்காக சத்தியாக்கிரகம் நடத்தச் செல்லும் போது அம்மையார் என்னையும் அழைத்தார்கள். அதற்கு நான், “இதைப்பற்றி காங்கிரசில் தீர்மானம் ஒன்றும் போடவில்லை. ஆனாலும் உங்களுக்குத் துணையாக வேண்டுமானால் வருகிறேன்” என்றேன். உடனே அவர்கள், “நான் என் கணவன் துணையுடன் செல்கிறேன். வேறு துணை வேண்டியதில்லை” என்று கூறி விட்டு வைக்கத்துக்குச் சென்றார்கள். போராட்டத்தில் வெற்றியும் பெற்றார்கள்.

இன்று நம்முடைய கொள்கைகள் நாடெங்கும் பரவி, இதைப் பற்றித் தெரியாத வரே இல்லையென்கிற நிலைமை யிருக்கிறது. இயக்கத்தில் பணியாற்றவும் நீ முந்தி; நான்முந்தி என்று ஏராளமான தோழர்கள் இன்று நிரம்பியிருக்கிறார்கள். ஆனால் ஆரம்பக் காலத்தில் இயக்கத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர்தான் இருந்தார்கள். இயக்கத்துக்கென்று நிதியோ, பண வசதியோ கிடையாது. அவரவர் சொந்த வேலைகளையும் விட்டுவிட்டு இயக்கமே உயிர் என்று முன் வந்தவர்கள். அப்போர்ப் பட்டவர்களை எப்போதும் அன்போடு வரவேற்று, உபசரித்து, ஆதரித்து வந்தவர்கள் அம்மையார்தான். அம்மையார் மட்டும் இல்லாமலிருந்தால் அப்போது இயக்கத்துக்கு ஆளே கிடைத்திருக்காது, இப்போது இந்த அளவுக்கு வளர்ச்சியும் வந்திருக்காது என்பது என்னுடைய உறுதியான எண்ணம்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், அடிக்கடி அய்யாவுக்கும் அழகிரிக்கும் வருத்தம் உண்டாகும். அம்மாதிரி நேரங்களிலெல்லாம் அம்மையார் அழகிரியை அழைத்து, ‘தந்தை கோபித்தால் தாயிடத்தில் மகன் இருக்க வேண்டியதுதானே முறை’ என்று கூறி ஆறுதல் சொல்லுவார்கள். எல்லோரிடத்திலும் இதைப் போலவே இதமான வார்த்தைகளைச் சொல்லி சமாதானப்படுத்துவார்கள். அன்று பணியாற்றிய யாவரும் அன்புக்குக் கட்டுப்பட்டுத்தான் இருந்து வந்தார்கள்.

அந்தக் காலத்தில் கழகத்திற்கென்று அமைப்பு முறை இல்லை. அதனால் எந்த விஷயத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமானாலும் இயக்கத்திலுள்ள முக்கிய மானவர்கள் ஈரோடு சென்று வரவேண்டும். சொந்தச் செலவில், காங்கிரசுக்கு இருந்ததுபோல் இந்த இயக்கத்துக்கு வெளியார் பண உதவியும் கிடையாது. ஆகவே இப்படிப்பட்ட நெருக்கடிகளுக்கிடையிலும் இயக்கம் வளர்ந்ததென்றால் அதற்கு அம்மையாரின் அன்பு கலந்த உற்சாகமூட்டும் மொழிகளைத் தவிர வேறு எதுதான் காரணமாயிருக்க முடியும்! ஆனால் அம்மையார் எந்தக் காலத்திலும் மேடையேறிப் பேசியதுமில்லை; எந்தப் பத்திரிகையிலும் எழுதியதுமில்லை. இயக்கத்தையே வாழ்வாகக் கருதி அவ்வளவு அக்கறையோடு பணியாற்றி வந்தார்கள்.

ஒரு சமயம் காரைக்குடியில் தோழர் முருகப்பா அவர்கள் முயற்சியால் ஒரு சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. அதற்கு மறைந்த தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தன்னுடைய தலைமையுரையில், ‘தகப்பன் சொத்தில் பெண்களுக்கும் உரிமையிருக்க வேண்டும்’ என்று பேசினார்கள். அதன்படி அந்த மாநாட்டில் அதே மாதிரி தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றி னோம். இவ்வளவு காலத்துக்குப் பிறகு இப்போது அது சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. காலதாமதமாக ஆனாலும் இது வெற்றி பெற்றது குறித்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

இப்படித்தான் முன்பு தேவதாசி முறை ஒழிப்பு சம்பந்தமாய் நான் தீவிரமாய்ப் பணியாற்றியதைப் பாராட்டி காந்தியார் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். நான் அந்தக் கடிதத்தை வைத்து தினந்தோறும் பூஜை செய்து வந்தேன். காங்கிரசை விட்டு விலகிய பின்பு - அந்தக் கடிதம் என்ன, காந்தியாரே நினைவிலிருந்து நீங்கிவிட்டார். என்ன செய்வது?

அன்னை நாகம்மையார் மறைந்த செய்தி தந்தி மூலம் மாயவரம் தோழர் நடராசனுக்குக் கிடைத்தது. உடனேஅலறிக்கொண்டு என்னிடம் ஓடி வந்தார். இருவரும் தேம்பித் தேம்பி அழுதோம். என்ன பயன்? எங்களைத் தேற்ற அன்னை நாகம்மையாரா இருக்கிறார்கள்?

“ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியேனம்மா” என்றபடி - எத்தனை பேர் சேர்ந்தாலும் ஒரு அன்னை நாகம்மையாருக்கு ஈடாக முடியுமா? அவர்களின் அன்பு தவழும் முகமும், ஆதரவு நீரம்பிய கரங்களும் நம்மை என்றும் இந்த இயக்கப் பணியிலிருந்து வழுவாதிருக்க உதவுமே! அது போதும்.

அன்னை நாகம்மையார் புகழ் நீடு வாழ்க!

-முரசொலி பொங்கல் மலர் - 1956